www.Padasalai.Net www.CBSEtips.in

திண்டுக்கல் மாவட்டம்

9 - ஆம் வகுப்பு இரண்டாம் இடைப்பருவத் தேர்வு - 2022

காலம் : 1.30 மணி

# தமிழ்

மதிப்பெண்கள் : 50

பிரிவு 1 - (பகுதி 1)

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 6 X 1 = 6

1. பாரதிதாசனின் இயற்பெயர்
அ. பாரதி ஆ. கனகசுப்புரத்தினம் இ. நாமக்கல் கவிஞர் ஈ. திருஞானம்
2. தேவதாசி ஒழிப்புச் சட்டம் நிறைவேறத் துணை நின்றவர்
அ. முத்துலெட்சுமி ஆ. மூவலூர் இராமாமிர்தம் இ. பண்டிதரமாபாய் ஈ. மலாலா
3. சிறுபஞ்சமூலத்தில் ஒவ்வொரு பாடலிலும் வெளிப்படும் கருத்துகளின் எண்ணிக்கை அ. 7 ஆ. 6 இ. 8 ஈ. 5
4. 'பொதுவர்கள் பொலிஉறப் போர் அடித்திடும்' நிலப்பகுதி --------
அ. குறிஞ்சி ஆ. நெய்தல் இ. முல்லை ஈ. பாலை
5. மரவேர் என்பது --------- புணர்ச்சி
அ. இயல்பு ஆ. திரிதல் இ. தோன்றல் ஈ. கெடுதல்
6. சொல்லும் பொருளும் பொருந்தியுள்ளது எது?
அ.வருக்கை - இருக்கை ஆ. புள் - தாவரம் இ. அள்ளல் - சேறு ஈ. முடிவு - தொடக்கம்

**பகுதி - 2 ( மதிப்பெண் - 12 ) பிரிவு 1**

**குறுகிய விடை தருக (மூன்று மட்டும்)** 3 X 2 = 6

**விடைக்கேற்ற வினா அமைக்க.**

7. அ. பெண்கள் உயர்கல்வி கற்று சிறப்படைந்துள்ளனர்.
ஆ. சோழர் காலத்தில் கற்சிற்பங்கள் அமைக்கும் முறை வளர்ச்சி பெற்றது.
8. சாரதா சட்டம் எதற்காக இயற்றப்பட்டது?
9. உலகிற்கு அச்சாணியாக இருப்பவர் யார்?
10. பாலை நிலத்தில் பருந்துகள் பறந்ததன் காரணம் என்ன?

**பிரிவு - 2**

**குறுகிய விடை தருக. (மூன்று மட்டும்)** 3 X 2 = 6

11. ***மரபுத்தொடர்களைக் கொண்டு தொடரமைக்க.***
உடும்புப்பிடி, மேளதாளத்துடன்
12. ***மரபுப்பிழைகளை நீக்கி எழுதுக.***
அ. காவியன் பானை செய்யக் கற்றுக்கொண்டான்.
ஆ. நேற்று தென்றல் காற்று வீசியது.
13. ***மொழிபெயர்க்க.***
அ. Walk like a bull ஆ. Union is strength
14. ***இடைச்சொற்களைக் கொண்டு நிறைவு செய்க.***
பெண்கள்------ ப்படிக்க வைக்காத காலத்தில்- ---பெண்குலம்------பெருமை சேர்க்கும் பெண்கள்------ ப்படிக்க வைக்காத காலத்தில் ... நம் முத்துலட்சுமி அம்மையார் முதல் பெண் மருத்துவர் --------- வந்தார். படி ------- நம் முத்துலட்சுமி அம்மையார் முதல் பெண் மருத்துவர் --------- வந்தார்.

**பகுதி - 3 மதிப்பெண்கள் - 9** 3 X 3 = 9

15. சங்ககாலப் பெண்பாற் புலவர்களின் பெயர்களை எழுதுக.
16. ஆண்டாளின் கனவுக் காட்சியை எழுதுக.
17. குறிஞ்சி நிலம் மணப்பதற்கான நிகழ்வுகளைக் குறிப்பிடுக.
18. 'பூவாது' எனத் தொடங்கும் சிறுபஞ்சமூலப் பாடலை எழுதுக.



Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

பகுதி - 4 (மதிப்பெண்கள் - 15) 3 X 5 = 15

19. நீ சென்று வந்த பயணத்தில் கண்டு களித்த காட்சிகளை உன் நண்பனுக்கு கடிதமாக எழுதுக.

20. காட்சியைக்கண்டு கவினுற எழுதுக.



21. **பத்தியைப் படித்து விடையளிக்கவும்.**

சிறுகதை என்றால் சிறிய கதை, கொஞ்சப் பக்கங்களில் முடிந்து விடுவது என்பதல்ல: ஒரு சிறு சம்பவம், ஒரு மனோநிலை ஆகியவற்றை மையமாக வைத்து எழுதப்படுவது: சிறுகதையில் சம்பவமோ, நிகழ்ச்சியோ அல்லது எடுத்தாளப்படும் வேறு எதுவோ அது ஒன்றாக இருக்க வேண்டும்.

சிறுகதைப் பின்னலில் ஆரம்பம், மத்திய சம்பவம், அதன் வளர்ச்சி அல்லது வீழ்ச்சி என்ற மூன்று பகுதிகள் உண்டு. சாதாரணமான கதைகளில் இம்மூன்றும் படிப்படியாக வளர்ந்து கொண்டே போகும். சமீபத்தில் எழுதப்பட்ட அமெரிக்க சிறுகதைகளில் பழைய சம்பிரதாயங்கள் ஆரம்பம், முடிவு என்ற இரண்டு பகுதிகளும் கிடையவே கிடையாது. கதை திடீரென்று மத்திய பகுதியில் ஆரம்பிக்கிறது. அதிலேயே முடிவடைகிறது. இன்னும் வேறு ஒரு விதமான கதைகளும் உண்டு. அவற்றில் முடிவு என்ற ஒன்று கிடையாது. அதாவது கதையை வாசிப்பது நமது சிந்தனையின் சலனத்தை ஊக்குவதற்கு ஒரு தூண்டுகோல்.

அ. சிறுகதை என்பது எது?

ஆ. சிறுகதை எதனை மையமாக வைத்து எழுதப்படும்?

இ. சிறுகதை எத்தனைப் பகுதிகளை உடையது/

ஈ. சிறுகதை படிப்பதால் நமக்கு ஏற்படும் நன்மைகள் யாவை?

22. **பா நயம் பாராட்டுக.**

வயலிடைப் புகுந்தாய் மணிக்கதிர் விளைத்தாய்
வளைந்துசெல் கால்களால் ஆறே!
அயலுள ஓடைத் தாமரை கொட்டி
ஆம்பலின் இதழ்களை விரித்தாய்
கயலிடைச் செங்கண் கருவரால் வாளை
கரைவளர் தென்னையில் பாயப்
பெயரிடைப் பட்ட வானெனத் தோன்றும்
பெருங்குளம் நிறைந்து விட்டாயே!

**பகுதி - 5** 1 X 8 =8

23. இராவண காவியத்தில் உங்களை ஈர்த்த இயற்கை எழில் காட்சிகளை விவரிக்க.

**(அல்லது)**

நூலகம், நூல்கள் ஆகியன குறித்து அண்ணாவின் வானொலி உரையால் வெளிப்படுகின்ற கருத்துகள் யாவை?



Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593